தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 19, விய – திருவள்ளுவர் ஆண்டு 2038

2007 ஏப்ரல் 2, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலுங் காத்த
வகுத்தலும் வல்ல தரசு."

முறையாக நிதி ஆதாரங்களை வகுத்து, அரசாங்கக் கருவூலத்திற்கான வருவாயைப் பெருக்கி, அதைப் பாதுகாத்துத் திட்டமிட்டுச் செலவிடுவதுதான் திறமையான நல்லாட்சிக்கு இலக்கணமாகும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா எண் 1, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.*

வினா எண் 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலியவரதன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

2—

இணைப்புச் சாலை

***2498—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முகையூர் தொகுதி, ஐம்பை முதல் தேவரடியார் குப்பம் வரை இணைப்புச் சாலை அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

முகையூர் தொகுதி, ஐம்பை முதல் தேவரடியார் குப்பம் வரை இணைப்புச் சாலை அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலிவரதன்.

திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி. எனது முகையூர் தொகுதி, ஐம்பை முதல் தேவரடியார் குப்பம் வரை இணைப்புச் சாலையை அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்குத்தான் பதில் சொல்லிவிட்டார்களே! (குறுக்கீடு) மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முகையூர் தொகுதியில் இருக்கக்கூடிய ஐம்பை மற்றும் தேவரடியார் குப்பம் கிராமங்களை இணைக்கும் பிரதானச் சாலை, நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்ததாகும். இந்தத் தார்ச் சாலையினுடைய மொத்த நீளம் 4 கிலோ மீட்டர் 300 மீட்டர் ஆகும். இச்சாலையில் மேம்படுத்தக்கூடிய பணியாக, நெடுஞ்சாலைத் துறை மூலமாக ரூபாய் 22 இலட்சம் மதிப்பீட்டில் ஓர் அடுக்கு கருங்கல் ஜல்லி மற்றும் தார்த் தளம் அமைக்கும் பணி எடுத்துக்கொள்ளப்பட்டு, பணி நடைபெற்று வருகிறது. மேற்கண்ட சாலையைத் தவிர, ஒரு கிலோ மீட்டர் 600 மீட்டர் நீளம் உள்ள பிறிதொரு வகைப்படுத்தப்படாத சாலையும் உள்ளது. இந்தச் சாலை தற்போது மண் சாலையாக இருக்கிறது. தற்போது 2007–2008 ஆம் ஆண்டில் ஒன்றியப் பொது நிதியின்மூலம் ரூபாய் 2 இலட்சம் மதிப்பீட்டில் செம்மண் கப்பிச் சாலையாக அதனை மேம்படுத்த ஊராட்சி ஒன்றியத்தின்மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 3, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சின்னசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.